TAMILNADU CORPORATION FOR DEVELOPMENT OF WOMEN LTD.,
(A GOVERNMENT OF TAMILNADU UNDERTAKING)
Anna Teresa Malagam, 1st Floor, Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai - 600 034.

கலைஞர் 100
1924 - 2023

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

**பிறப்பிப்பவர்: திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப.,**

**செ.மு.ஆ.எண்: 463/கூ.&ஒ/2024** **நாள்: 02.07.2024**

**பொருள்:** த.ம.மே.நிறுவனம் – கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு – முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் விரிவாக்கம் – சமையல் பொறுப்பாளர்களுக்கு பயிற்சி அளித்தல் – வழிகாட்டி நெறிமுறைகள் அனுப்புதல் – சார்பாக.

**பார்வை:**
1. மேலாண்மை இயக்குநர், த.ம.மே.நிறுவனம் அவர்களின் செயல்முறை ஆணை : 465/கூ.&ஒ/2024 நாள்: 20.05.2024.
2. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பாணை எண்.15, நாள்: 27.06.2024.

******

2024-25ம் கல்வியாண்டில் தமிழகம் முழுவதுமுள்ள 37 மாவட்டங்களிலுள்ள ஊரக பகுதிகளில் செயல்படும் 400க்கும் மேற்பட்ட அரசு நிதி உதவிப் பெறும் துவக்க, நடுநிலை (ம) உயர்நிலைப் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது.

2023-24ஆம் ஆண்டு திட்ட விரிவாக்கத்தின் போது பயிற்றுநர்களுக்கான பயிற்சி ஒரு வட்டாரத்திற்கு 3 நபர்கள் விதம் 371 வட்டாரங்களிலிருந்து 1113 மகளிர் சுய உதவிக்குழு பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு 13 வகையான காலை உணவுத் தயாரித்தலுக்கான பயிற்சி முதன்மை பயிற்றுநர்களால் RIRD – பட்டுக்கோட்டை, S.V.நகரம், T. கல்லுப்பட்டி, கிருஷ்ணகிரி மற்றும் பவானிசாகர் ஆகிய பயிற்சி மையங்களில் 2 நாள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, தற்போது பயிற்சி பெற்ற அப்பயிற்றுநர்களைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அனைத்து வட்டாரங்களிலும் பயிற்சிகள் நடத்திடவும், பயிற்சிக்கான உணவு மூலப்பொருட்கள், பயிற்றுநர்களுக்கான மதிப்பூதியம், பேனர் மற்றும் ஆவணப்படுத்துவதற்காக மேலாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின்

மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படியும் கீழ்காணும் வழிமுறைகளின்படியும் 2 நாட்களுக்கான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**வழிகாட்டி நெறிமுறைகள்**

1. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்ற பயிற்றுநர்களைக் கொண்டு (ToT) பயிற்சிகள் நடத்தப்பட வேண்டும்.
2. பயிற்றுநருக்கான மதிப்பூதியம் நாள் ஒன்றுக்கு ரூ.500/- என 2 நாட்களுக்கு ரூ.1000/- அளிக்கப்பட வேண்டும்.
3. பயிற்சிகளை மாவட்ட மகமை/மாவட்ட மேலாண்மை அலகு (அ) அருகாமையிலுள்ள வட்டார சேவை மையக் கட்டிடம் (அ) கிராம ஊராட்சி சேவை மையக் கட்டிடம் (VPSC Building) மற்றும் சமுதாய கூடங்களில் நடத்திட வேண்டும்.
4. இரண்டாம் நாள் பயிற்சியில் உணவு பாதுகாப்பு மேலாண்மை குறித்த அமர்வு பற்றிய பயிற்சிகள் வழங்கப்படும்.
5. தளவாடப் பொருட்கள் இருப்பு, மூலப்பொருட்கள்/ இருப்பு (உணவு பொருட்கள்) (ம) பண வரவு மற்றும் செலவு விவரங்கள் சார்ந்த பதிவேடுகளின் பராமரிப்பு பற்றியும், சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) மற்றும் திறனுடைய SHG குக் மூலம் CMBFS - Mobile APP பற்றிய பயிற்சிகள் வழங்கப்படும்.
6. பயிற்சியின் துவக்கத்திலும் மற்றும் ஒவ்வொரு உணவு தயாரிக்கும் முன்பும் சமையல் குறித்த 13 குறும்படங்கள் காட்டாயம் காண்பிக்கப்பட வேண்டும்.
7. தேர்ந்தெடுக்கப்பட்ட சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டே காலை உணவு தயாரிக்கப்பட வேண்டும்.
8. அனைத்து வட்டாரங்களிலும் பயிற்சிகள் முடிவுற்ற பின்பு, அதற்கான பயன்பாட்டுச் சான்றினை மேலாண்மை இயக்குநருக்கு அளிக்கப்பட வேண்டும்.
9. பயிற்சியின் போது புகைப்படங்களுடன் ஆவணப்படுத்திடவும், மேலாண்மை இயக்குநருக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

**EXPANSION OF CHIEF MINISTER'S BREAKFAST SCHEME TO Govt. AIDED SCHOOL 2024-25**

**Training Schedule for 2 Days**

**Training for Kitchen In-Charge for Aided Schools**

| Session | Particulars of the Training | Duration | Resource persons |
|---|---|---|---|
| | | **DAY- 1** | |
| 1. | Registration of Trainees | 8.45 am | |
| 2. | Introduction Speech about CMBFS | 9.00 am to 10.00 am | PD TNSRLM/ APO (P&C)/ PA (NMP) |
| 3. | Hands on training session on 5 Menus<br>i. Rava Uppuma<br>ii. Semiya Uppuma<br>iii. Rice (Noi) Uppuma<br>iv. Wheat rava Uppuma<br>v. Rava Vegetable Kichadi | 10.00 am to 01.30 pm | 3 Master Trainers from Nodal Districts |
| | **Lunch Break** | **1.35 pm to 2.15 pm** | |
| 4. | Hands on Training session on 3 Menu<br>i. Vegetable Sambar<br>ii. Semiya with Vegetables<br>iii. Wheat rava Kichadi | 2.15 pm to 6.30 pm | 3 Master Trainers from Nodal Districts |

**EXPANSION OF CHIEF MINISTER'S BREAKFAST SCHEME TO Govt. AIDED SCHOOL 2024-25**

**Training Schedule for 2 Days**

**Training for Kitchen In-Charge for Aided Schools**

| S.No | Particulars of the Training | Duration | Resource persons |
|---|---|---|---|
| | | **DAY- 2** | |
| 1. | Hands on training session on 5 Menus<br><br>i. Cholam Vegetable Kichadi<br>ii. Venpongal<br>iii. Rava Pongal<br>iv. Rava Kesari<br>v. Semiya Kesari | 09.30 am to 01.30 pm | 3 Master Trainers from Nodal Districts |
| | **Lunch Break** | **1.35 pm to 2.15 pm** | |
| 2. | Session on Food Safety Management | 2.15 pm to 04.00 pm | Food Safety Officer from nearby District to RIRD/ SIRD |
| 3. | Register Maintenance, Stock, Accounting Procedure (with actual registers) | 04.00 pm to 05.00 pm | PA (NMP)/ BDO (NMP) |
| 4. | CMBFS- App Training and sharing Experience | 05.00 pm to 06.00 pm | One SHG women from Centre/ Kitchen Incharge |
| 5. | Feedback session | 06.00 pm to 6.15 pm | |
| 6. | Validation and certificate Distribution | 06.15 pm – 06.45 pm | |

**Foot Note: Before hands on training session on cooking CMBFS Break Fast Menu, the cooking videos to be played for that menu.**

**இணைப்பு:**

திருத்திய காலை உணவுத்திட்ட வழிகாட்டி நெறிமுறைகள்

ஒம்/-

**மேலாண்மை இயக்குநர்**

**த.நா.ம.மே. நிறுவனம்**

**// உண்மை நகல் உத்தரவுப்படி //**

**கூடுதல் இயக்குநர் (கூ.பொ)**

**த.நா.ம.மே. நிறுவனம்**

## நிலையான வழிகாட்டி செயல்முறைகள்

## முதலமைச்சரின் காலை உணவு திட்டம் விரிவாக்கம் (CMBFS) அரசு நிதி உதவிப் பெறும் பள்ளிகள்

**பொருள்:** மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – 2024-2025 சட்டமன்ற அறிவிப்புகள் – அரசு நிதி உதவிப் பெறும் ஆரம்பப் பள்ளி (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) குழந்தைகளுக்கு காலை உணவை வழங்குதல் – கிராமப்புறங்கள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள பள்ளிகளில் காலை உணவை சமைக்க SHG ஆகியவற்றின் சேவைகளை பயன்படுத்துதல் – தொடர்பாக.

**குறிப்பு:**

1. அரசாணை நிலை எண்: 43. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள் 27.07.2022.
2. அரசாணை நிலை எண்: 33. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1)துறை, நாள் : 07.06.2023.
3. 2024-25க்கான சட்டமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 19.02.2024
4. சமூக நல ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்: 3652/NMP-2/2023 நாள்: 02.03.2024.
5. மாநில அளவிலான அலுவலர்களின் கலந்தாய்வு கூட்ட நாள் 04.03.2024 & 08.03.2024.

********

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 6 மே 2022 அன்று சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் ஆரோக்கியமான வருங்காலக் சந்ததியினரை உருவாக்குவதற்காக அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அனைத்து வேலை நாட்களிலும் இலவச காலை உணவு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 15 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முதற் கட்டமாக கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் தொடங்கப்பட்டது.

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் முதற்கட்டமாக 16 மாவட்டங்களில் (17 வட்டாரங்கள், 346 கிராம ஊராட்சிகள் மற்றும் 963 பள்ளி மையங்கள்) அரசுப் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டது. கிராமப்புறங்களில் முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளில் (346) முதன்மைக் குழுவால் தேர்வுசெய்யப்பட்டுள்ள சுய உதவிக்குழுக்கள்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு/ பகுதி அளவிலான கூட்டமைப்புகளைச் சார்ந்த உறுப்பினர்களின் சேவைகளைப் பயன்படுத்தி தற்போதுள்ள மதிய உணவு திட்ட சமையல் கூடங்களில் இக்காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது.

2023-2024 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற பட்ஜெட் அறிவிப்பின்படி கிராமப்புறம் மற்றும் நகர்புறங்களில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கும் "முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை" விரிவுபடுத்தபடுவதாக அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் 2023-2024 கல்வியாண்டு முதல் மாநிலத்தில் உள்ள 30,122 அரசு தொடக்கப்பள்ளிகளுக்கும்" முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் 18 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத் திட்டத்திற்கு ரூ.500 கோடி பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

***"முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் – பல்விக்கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லா குழந்தைகளும் பசியின்றி கல்வியறிவுப் பெற்றிடவும், எந்த தியாகத்தையும் செய்வோம்"*** என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தினை மேலும் முழுமையாகச் செயல்படுத்திட, ***"தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் இயங்கிவரும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மேலும் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் பயனடையும் வகையில், வரும் கல்வியாண்டு முதல் இத்திட்டம் விரிவுப்படுத்தப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக வரும் நிதியாண்டில் (2024-2025) ரூ.600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது".***

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 2024-2025 விரிவாக்கம்**

2024–2025 பட்ஜெட் அறிவிப்பின்படி, CMBFS (முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்) கிராம ஊராட்சிகள் / பேரூராட்சிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு உள்ள அரசு உதவிப்பெறும் தொடக்கப்பள்ளி, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தபடவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் உள்ள அரசு உதவிப்பெறும் ஆரம்ப பள்ளிகளில் பயிலும் சுமார் 16,78,578 குழந்தைகள் பயனடைவர். மேலும், கிராமபுறங்களில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பால்/பகுதி அளவிலான கூட்டமைப்பால் முன்மொழியப்பட்டு முதன்மை குழுவால் தேர்வுசெய்யப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / பகுதி அளவிலான கூட்டமைப்பு / மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த மகளிர் பள்ளி சமையலறை மையங்களை நிர்வகிப்பதுடன் குழந்தைகளுக்கு காலை உணவு தயாரித்தல் மற்றும் பரிமாறுதல் போன்ற பணியிலும் ஈடுபடுவார்கள்.

**கிராம ஊராட்சி அளவிலான /பேரூராட்சி அளவிலான முதன்மைக் குழு (Core Committee)**

- நிலையான வழிகாட்டு செயல்முறைகளில் (SOP) குறிப்பிடப்பட்டுள்ளதன்படி முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திட ஊராட்சி / பேரூராட்சி அளவில் ஒரு முதன்மைக் குழு அமைக்கப்பட வேண்டும்.
- ஊராட்சி மன்றத் தலைவர் / பேரூராட்சி நகர்மன்ற தலைவர், அரசு உதவிப்பெறும் பள்ளி முதல்வர் / பள்ளித் தலைமை ஆசிரியர், பள்ளி மேலாண்மை குழுவின் தலைவர் மற்றும் அதன் ஒரு பிரதிநிதி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / பகுதி அளவிலான கூட்டமைப்பின் ஒரு அலுவலக பிரதிநிதி ஆகியோரை உறுப்பினராகக் கொண்ட முதன்மைக் குழு அமைக்கப்பட வேண்டும்.
- பள்ளியின் தலைமை ஆசிரியர் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக செயல்படுவார்.
- சம்மந்தப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி அனைத்து கிராம அளவிலான பகுதி மற்றும் நகர்புற அளவிலான பகுதிகளிலும் கிராம ஊராட்சி / பேரூராட்சி அளவிலான முதன்மை குழு அமைக்கப்பட வேண்டும். ஏற்கனவே அமைக்கப்பட்ட குழுக்கள் தொடர்ந்து செயல்பட வேண்டியது.
- இம்முதன்மைக் குழு SHG ஆகியவற்றை தேர்வு செய்வதுடன், முன்னுரிமை அடிப்படையில் அதே மையத்தில் மதிய உணவு சமையற் கூடத்தை காலை உணவு சமைப்பதற்கான இடமாகவும் இறுதி செய்ய வேண்டும்.

- மதிய உணவு திட்டம் செயல்படும் சத்துணவு கூடம் அரசு உதவிப்பெறும் பள்ளி வளாகத்தினுள் ஒரு கட்டிடம் ஆகியவற்றுள் ஏதேனும் சேமிப்பு வசதியுள்ள, முதன்மைக் குழுவால் தேர்வு செய்யப்படும் கட்டிடத்தினை ஊராட்சி மன்றத் தலைவர் / பேரூராட்சி நகர் மன்ற தலைவர் / அரசு நிதி உதவிப்பெறும் பள்ளி நிர்வாகக்குழு, சமையல் கூடத்திற்கென ஒதுக்கீடு செய்து வழங்கப்பட வேண்டும்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிடத்தில் மின்சாரம் / மின்விளக்கு வசதி இருப்பதனை ஊராட்சி மன்றத் தலைவர் / பேரூராட்சி நகர் மன்ற தலைவர் / அரசு நிதி உதவிப்பெறும் பள்ளி நிர்வாகக்குழு உறுதி செய்ய வேண்டும். மேலும் இம்மையத்திற்கான குடிநீர் ஏற்கனவே உள்ள குடிநீர் இணைப்பிலிருந்து வழங்கப்படலாம்.

- மலைப்பிரதேசம் மற்றும் உட்கடை கிராமங்களில் தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களில் எவ்வித இடர்பாடுமின்றி காலை உணவை சமைத்து மாணவர்களுக்கு வழங்கிட SHG உடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட வேண்டும்.

- காலை உணவுத் திட்டத்திற்கென அரிசி, பருப்பு, எண்ணெய், சுண்டல், காய்கறிகள் போன்ற உணவுப் பொருட்களை நன்கொடைகளாக பெறுவதற்கு ஊராட்சி மன்றத் தலைவரால் / அரசு நிதி உதவிப்பெறும் பள்ளி நிர்வாகக்குழுவால் தானிய வங்கி அமைக்கப்பட வேண்டும். ஆனால் ரொக்க நன்கொடைகள் அனுமதிக்கப்படக் கூடாது.

- அரிசி, சிறுதானிய வகைககள், பழங்கள், காய்கறிகள், பாத்திரங்கள், தட்டு மற்றும் டம்ளர் போன்றவைகள் தேவைப்படும் இடங்களில் ஊராட்சி மன்றத் தலைவரால் / அரசு நிதி உதவிப்பெறும் பள்ளி நிர்வாகக்குழுவால் வழங்கப்பட வேண்டும். தட்டு/டம்பளர் போன்ற பொருட்களை CSR அடிப்படையில் நன்கொடை பொருட்களாக பெறலாம்.

- அரசு ஆணையில் அங்கீகரிக்கப்பட்ட உணவு வகைகளின்படி காலை உணவு வழங்கப்படுவதை முதன்மைக் குழு கட்டாயமாக உறுதி செய்வதுடன், வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் அளவினையும் கண்காணித்திடல் வேண்டும்.

- அரசாணை எண்-43 (ம) 33ல் இணைப்பு II இன் படி, பட்டியலிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட உணவு வகைகளின் மெனுவின் அடிப்படையில் பள்ளிகளின் 5 வேலை நாட்களிலும் காலை உணவு வழங்குவதை முதன்மைக் குழுவால் உறுதி செய்யப்பட வேண்டும். மேலும், மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மெனுவில் குறிப்பிடப்பட்டுள்ள உணவினை வழங்கிட மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான குழுவால் முடிவு செய்யப்பட வேண்டும்.

- SHG செயல்பாட்டில் ஏதேனும் தவறு / ஒழுங்கின்மை / முறைகேடு கண்டறியப்பட்டால், உடனடியாக சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) / மண்டல உதவித் திட்ட அலுவலர் / நேர்முக உதவியாளர்(சத்துணவு) மற்றும் திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மாவட்ட இயக்க மேலாண்மை அலகு) கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அவர்களால் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- அனைத்து கூட்டங்களின் நடவடிக்கைகள் இதற்கான தனியாக உள்ள பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

**B) SHG ஐ தேர்வு செய்வதற்கான வழிமுறைகள்**

இத்திட்டத்தின் கீழ் பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு சமைக்கும் பணியினை SHG (முன்னுரிமை மகளிர் சுய உதவிக்குழு) உறுப்பினர்கள் மட்டுமே மேற்கொள்ள வேண்டும். மகளிர் சுய உதவிக்குழு/ஊராட்சி / பகுதி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளை பின்பற்றி தேர்வு செய்யப்பட வேண்டும்:

1) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் அனுபமுள்ள SHG-ல் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

2) தேர்ந்தெடுக்கப்படும் SHG உறுப்பினர் அதே கிராம ஊராட்சியில்/பேரூராட்சிப் பகுதியில் வசிப்பிடமாக கொண்டு வசிப்பவராக இருக்க வேண்டும்.

**விதிவிலக்கு** - ஊராட்சி/பேரூராட்சி முதன்மைக் குழு தகுதியான SHG ஏதும் இல்லை என்று சான்றளிக்கும்பட்சத்தில் மட்டுமே, வேறு ஊராட்சி/பேரூராட்சியை சார்ந்த சுய உதவிக் குழுக்கும் காலை உணவு தயாரிக்கும் பணியினை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

3) காலை உணவை சமைப்பதற்கும் பரிமாறுவதற்கும் தேர்வு செய்யப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உணவு தயாரிப்பதில் போதுமான/அடிப்படை அறிவு பெற்றிருக்க வேண்டும்;

4) சுய உதவிக்குழு உறுப்பினரின் குழந்தைகள் அதே பள்ளியில் படிக்க வேண்டும்.

5) SHG உறுப்பினர் குறைந்தபட்ச கல்வித் தகுதியாக 10 ஆம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும்.

6) மலைப்பாங்கான, தொலைதூர மற்றும் பழங்குடியின கிராமங்களில் 10 ஆம் வகுப்பு வரை பயின்ற மகளிர் சுய உதவிக் குழு இல்லையெனில் 8 ஆம் வகுப்பு வரையாவது படித்திருக்க வேண்டும்.

7) தேர்வு செய்யப்பட்ட மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தங்கள் பெயரில் இணைய வசதியுடன் கூடிய "Android மொபைல் போன்" வைத்திருக்க வேண்டும்.

8) தேர்வு செய்யப்படும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கடந்த 3 ஆண்டுகளில் பெற்ற கடன்களை தவணை தவறாது நிலுவையின்றி செலுத்தியிருப்பவராக இருக்க வேண்டும்;

9) தேர்வு செய்யப்பட்ட மகளிர் சுய உதவிக்குழு போதுமான நிதி இருப்பினை கொண்டிருக்க வேண்டும் மற்றும் காலை உணவத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு குழு போதுமான நிதி மூலதனத்தை கொண்டிருக்க வேண்டும்;

10) இத்திட்டத்தை செயல்படுத்திடுவதற்கான தேர்வு செய்யப்பட்டுள்ள SHG உறுப்பினர்களின் விருப்ப கடிதம் பெறப்பட்டு மற்றும் அது தொடர்பான தீர்மானத்தினை தீர்மானப் பதிவேட்டில் பதிவு செய்திருக்க வேண்டும்.

11) பள்ளிக் குழந்தைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட SHGக்குள், 2 முதல் 3 உறுப்பினர்கள் வரை இந்தத் திட்டத்தின் கீழ் பணியாற்றுவதற்கும் சமையல் பயிற்சி அளிப்பதற்காகவும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

**C) பயிற்சி மற்றும் திறன் கட்டமைப்பு**

முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கென அனுமதி வழங்கப்பட்டுள்ள உணவு வகைகளை தயாரிப்பதற்கு மாவட்ட நிர்வாகத்தால் மாநிலத்தில் உள்ள மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் மூலம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் ஒப்புதல்

வழங்கப்பட்ட பயிற்சி அட்டவணையின்படி தேர்வு செய்யப்பட்ட மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு சமையற்கலை திறன் பயிற்சியாக இரண்டு நாட்கள் பயிற்சி வழங்கப்படும். மேலும், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான 2 நாள் பயிற்சியில், 12 வகையான உணவு வகைகள் தயாரிப்பதற்கு 1½ நாட்களும், மற்றும் சுகாதாரமான உணவு மற்றும் பாதுகாப்பான சமையல் வழிமுறைகளை பின்பற்றி சமைப்பது தொடர்பாக மாவட்ட உணவுப் பாதுகாப்பு அலுவலரால் ½ நாள் பயிற்சியும் வழங்கப்படும். மேலும் பதிவேடுகள் பதிவு செய்தல் CMBFs Mobile Appல் தரவுகள் பதிவு செய்வதற்கு மற்றும் பராமரித்தல் தொடர்பாகவும் பயிற்சி வழங்கப்படும். ஒரு மையத்திற்கு 2 முதல் 3 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் வரை மேற்காணும் பயிற்சியினை இத்திட்டம் ஆரம்பிக்கும் 15 நாட்களுக்கு முன் பயிற்சியினை முடிக்கப்பட வேண்டும்.

**D) சமையலறைக் கூடத்தினை தேர்வு செய்தல்**

1) அரசு உதவிப்பெறும் பள்ளி வளாகத்தில் இருக்கும் மதிய உணவு மையம்/ சமையலறை கூடத்தினை காலை உணவு சமைப்பதற்கான இடமாக தேர்வு செய்திட வேண்டும்.

2) தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிடத்தில் மின்சாரம்/ மின்விளக்கு வசதி, உணவு பெருட்கள் போன்றவை மற்றும் சமைப்பதற்கான பாத்திரங்கள் ஆகியவற்றினை வைப்பதற்கான சேமிப்பு அறையினையும் (Store Room) வசதியினை (அலமாரி போன்றவை) சம்பந்தப்பட்ட அரசு நிதி உதவிப்பெறும் பள்ளி நிர்வாகக்குழுவால் வழங்கப்பட வேண்டும்.

3) ஊராட்சி தற்போதுள்ள மதிய உணவு சமையலறைக் கூடத்திற்கு ஏதேனும் பழுதுநீக்கம் அல்லது புனரமைப்பு தேவைப்பட்டால், சம்மந்தப்பட்ட அரசு உதவிப்பெறும் பள்ளி நிர்வாக குழு ஏற்பாடு செய்திட வேண்டும் அல்லது பொது நிதி அல்லது MGNREG திட்டம் அல்லது வேறு எந்த நிதியிலிருந்தும் பழுது மற்றும் புனரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

4) கிராம ஊராட்சி / ஊராட்சி மன்ற தலைவர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) ஆகியோர் சத்துணவு / சமையலறைக் கூடங்களில் தேவையான தண்ணீர் வசதியினை அருகாமையிலுள்ள குடிநீர் இணைப்பின் வாயிலாக வழங்க வேண்டும்.

**பள்ளிக் கல்வித் துறையின் பங்கு:**

பள்ளிக் கல்வித் துறையானது ஊராட்சி/பேரூராட்சி பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளின் விபரத்தினை தெரிவிக்க வேண்டும் மற்றும் திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (சத்துணவு), உதவித்திட்ட அலுவலர் (கூடுகை மற்றும் கூட்டாண்மை), மண்டல உதவித் திட்ட அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) ஆகியோர் இணைந்து விபர பட்டியலின்படி உள்ள பள்ளிகளை ஊரக வளர்ச்சித் துறை, பேரூராட்சி, ஆதி திராவிடர் நலத்துறையை சார்ந்த பள்ளிகளா எனக் கண்டறிந்து/சரிபார்க்க வேண்டும். மேலும் சரிபாக்கப்பட்ட பள்ளிகளின் இறுதிப் பட்டியலை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் சிறப்பு அலுவலருக்கு (OSD)க்கு அனுப்பப்பட வேண்டும்.

மாணவர்களின் எண்ணிக்கை சரிபார்க்கப்படுவதுடன் மாணவர்களின் எண்ணிக்கையின் அளவில் பள்ளிகள் வகைப்படுத்துவதுடன் பள்ளிகளுக்கு தேவையான பாத்திரங்களின் தேவைப்பட்டியல் மற்றும் மதிப்பீடு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் நிர்ணயம் செய்யப்படும்.

I. மாணவர்களின் எண்ணிக்கை 10க்கு குறைவாக இருந்தால் அப்பள்ளியில் தனி சமையலறையோ, உணவு விநியோகத்திற்கான ஹாட்பாக்ஸ் / தூக்குவாலி / கரண்டிகள் / கேரியரைத் தவிர இதர சமையல் பாத்திரங்களோ வாங்க வேண்டிய அவசியமில்லை.

II. இதுபோன்ற பள்ளிகளில் ஊராட்சி அளவிலான / பேரூராட்சி அளவிலான முதன்மை குழு மற்றும் திட்ட இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியாரின் பரிந்துரையின்படி

மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி பரிந்துரையினை நிறைவேற்ற வேண்டும்.

III. பள்ளியின் சமையல் பொறுப்பாளர் அருகாமையிலுள்ள மாணவர்கள் அதிகம் உள்ள பள்ளியில் சமைத்து, 10 க்கும் குறைவான மாணவர் எண்ணிக்கை உள்ள பள்ளிக்கு காலை உணவை விநியோகிக்க வேண்டும். இப்பள்ளிகள் ஒவ்வொன்றையும் Map செய்து மாவட்ட ஆட்சித்தலைவரால் உத்தரவு வழங்கப்பட வேண்டும்.

IV. 10க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பள்ளிகள் கிராம அளவிலான / பேரூராட்சி அளவிலான முதன்மை குழுவால் மாணவர்கள் அதிகம் உள்ள பள்ளியுடன் ஆரம்ப நிலையிலேயே இணைக்க வேண்டும், மேலும் இதற்கென தனியாக சுய உதவிக் குழு சமையலறை மைய பொறுப்பாளர்களைக் கண்டறிந்து ஈடுபடுத்த வேண்டியதில்லை. மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவவின்படி இந்த துணை மையத்திற்கு சமையல் செய்ய தாய் மையமாக இருக்கும் கிராம /பேரூராட்சிகளில் உள்ள பள்ளிகளுடன் இணைத்து பள்ளி மாணவர்களுக்கு காலை உணவினை வழங்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் அவர்களின் பிரத்யேக ஆணையின்படி மலைப்பாங்கான இடங்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 10க்கு குறைவாக இருந்தாலும், தனியாக சமையலறையை அமைத்திடலாம். பயிற்சி பெற்ற 3 மகளிரில் ஒரு சுய உதவிக்குழு உறுப்பினர் அந்தப் பள்ளிக்கு காலை உணவை வழங்குவதற்கு ஈடுபடுத்தப்படுவார்கள்.

### F) சமைப்பதற்கும் பரிமாறுவதற்குமான நேரம் ஒதுக்கீடு

- காலை உணவுத் திட்டத்தின் கீழ் ஈடுபடும் SHGகாலை 6:00 மணிக்கு சமையல் பணிகளைத் தொடங்கி, காலை 8:15 மணிக்குள் முடிக்க வேண்டும்.
- சமையலைத் தொடங்கும் முன் பாத்திரங்கள் முற்றிலும் உலர்த்தப்பட்டதாக இருக்க வேண்டும்
- சமைத்த காலை உணவை குழந்தைகளுக்கு காலை 8.30 முதல் 8.50க்குள் சூடாக வழங்கப்பட வேண்டும்.
- சமைத்த பாத்திரங்களை சுத்தம் செய்து காலை 9.30க்குள் பள்ளிச் சூழலுக்கு எவ்வித இடையூறும் விளைவிக்காமல், தேர்வு செய்யப்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அப்பள்ளி வளாகத்தை விட்டு வெளியேற வேண்டும்.
- எவ்வித தொற்றும் ஏற்படாமல் இருக்க காலை உணவை சமைப்பதற்கு முன்பும், காலை உணவை பரிமாறிய பின்பும் பாத்திரங்களை தூய்மையாக நன்கு சுத்தம் செய்யப்பட வேண்டும்.
- சமைப்பதற்கு முன் உணவுப் பொருட்கள் அல்லது காய்கறிகளை வைத்திருக்க சுய உதவிக்குழு உறுப்பினர்கள் செய்தித்தாள்களை பயன்படுத்தப்படக்கூடாது.
- பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்பட்ட புள்ளி விபரத்தின்படி, பள்ளிகளில் வருகைபுரியும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் சுய உதவிக் குழு மையப் பொறுப்பாளரால் பராமரிக்கப்படும் வருகை பதிவின்படியான மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், பள்ளிக் கல்வித் துறையின் ஆலோசனை, அதாவது சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமையாசிரியர் ஆலோசனையின்படியும் தினமும் சராசரி எண்ணிக்கையிலான காலை உணவு தயாரிக்கப்பட வேண்டும்.

G) சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் எரிவாயு வழங்குவதற்கான வழிமுறைகள்

- கிராமபுறங்களில் உள்ள பள்ளி மையத்தின் குழந்தைகளுக்கு காலை உணவு தயாரித்து வழங்குவதற்கு தேவைப்படும் சமையல் எரிவாயு, அடுப்பு மற்றும் பாத்திரங்களுக்கான முழுத்தொகையையும் அரசிடமிருந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் பெற்று வழங்கப்படும்.

- அரசு நிதி உதவிப்பெறும் பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்ட மாவட்டங்களுக்கு திட்ட இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் பெயரில் உள்ள வங்கிக் கணக்கில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை துறையிலிருந்து நிதி பெற்று விடுவிக்கப்படும்.

- காலை உணவு திட்டம் ஆரம்பிக்கப்படும் 15 நாட்களுக்கு முன்னரே சமையல் பாத்திரங்கள் / எரிவாயு இணைப்புகளை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிலையான நடைமுறையைப் பின்பற்றி கொள்முதல் செய்திடவும், அந்தந்த பள்ளி மையங்களுக்கு சரியான நேரத்தில் வழங்கிடவும் மாவட்ட ஆட்சியரால் சம்மந்தப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு / பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிதி விடுவிக்கப்பட வேண்டும்.
- பள்ளி மையங்களுக்கு இரண்டு எரிவாயு சிலிண்டர்களை எவ்வித இடர்பாடுமின்றி வழங்கிட சமையல் எரிவாயு வழங்கும் நிறுவனத்திற்கு (HP, Indane, BPCL உள்ளிட்ட) மாவட்ட நிர்வாகம் சார்பில் கடிதம் அனுப்பப்பட வேண்டும்.

H) மளிகை பொருட்கள் மற்றும் காய்கறிகள் வாங்குவதற்கான வழிமுறைகள்

- காலை உணவு சமையலுக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் நல்ல தரமானதாகவும் உணவுத் தர கட்டுப்பாடு (FSSAI) சான்று பெற்றப்பட்டது என உறுதிப்படுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும். தரமற்ற பிற பொருட்கள் எதுவும் சமையலுக்கு பயன்படுத்தக்கூடாது. சமையலுக்குப் பயன்படுத்தப்படும் மசாலாப் பொருட்கள் தரமானதாகவும், முன்மொழியப்பட்ட அளவின்படியும் இருக்க வேண்டும்.

- உணவு தயாரிக்கும் பொருட்களான அரிசி, உப்பு, எண்ணெய் மற்றும் பருப்பு போன்ற முக்கிய பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் மட்டுமே கொள்முதல் செய்திட வேண்டும். உள்ளூரில் பொருட்களை கொள்முதல் செய்தல் கூடாது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சமையல் பொருட்கள் கொள்முதல் ஆணை வழங்குவதற்கு முன்பு நேர்முக உதவியாளர் (சத்துணவு) மற்றும் வட்டார வளர்ச்சி அலுலவர் (வ.ஊ) ஆகியோர் தரத்தை முன்கூட்டியே ஆய்வு செய்து அதன் பின்னரே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

- உணவு மூலப் பொருட்களான கோதுமை ரவா, சோளம் ரவா, ரவா, சேமியா, பாசிப்பருப்பு, சிவப்பு மிளகாய், கடுகு, மிளகு, சாம்பார் மசாலாப்பொடி, சோம்பு, சீரகம், வெந்தயம், பெருங்காயம் உள்ளிட்ட தேவைப்படும் பொருட்களை இணை பதிவாளர், கூட்டுறவு சங்கம் / மாநில கூட்டுறவு சங்கம் மற்றும் பொது விநியோகக் கடைகள் மூலம் பெறப்பட வேண்டும்.

- சமூக நலத்துறையால் வழங்கப்படும் இருப்பு பதிவேட்டின் அடிப்படையின்படி தினசரி பயன்படுத்தப்படும் உணவுப் பொருட்களின் விபரத்தினை இருப்பு பதிவேட்டில் பதிவு செய்திடவும் அதனை முறையாக பராமரிப்பதற்கும் ஈடுபடுத்தப்படும் SHG மையப் பொறுப்பாளரே பொறுப்பாவார்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட SHGயால் கத்தரி, முருங்கை, கேரட், உருளைக்கிழங்கு, பச்சை பட்டாணி, முட்டைகோஸ், பீன்ஸ், தக்காளி, வெங்காயம், பச்சை மிளகாய் போன்ற காய்கறிகளை உள்ளூர் சந்தையில்/கடைகளில் இருந்து வாங்கலாம் அல்லது பள்ளி அல்லது ஊராட்சி உள்ள பொதுவான பகுதியில் கிராம ஊராட்சியின் மூலம் உள்ள காய்கறித் தோட்டம் அமைத்து காய்கறிகளை பயிரிட்டு, பராமரித்து அக்காய்கறிகளை பயன்படுத்த வேண்டும்.
- சாம்பார்/கிச்சடிக்கு பயன்படுத்தப்படும் காய்கறிகளை சமையலுக்கு பயன்படுத்தும் முன் சுத்தம் செய்து அதன் தரத்தினை சரிபார்க்க வேண்டும்.
- அந்தந்த கிராம ஊராட்சிகளிலேயே உள்ள பொதுவான பகுதியில் காலை உணவுத் திட்டத்தின்கீழ் பயன்படுத்த தக்காளி, பச்சை மிளகாய், கத்தரி, முருங்கை போன்ற காய்கறிகளை விதைத்து, விளைவித்து பயன்படுத்த வேண்டும்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்கள் காலை உணவை சமைக்கும் போது, தன்சுத்தம் பராமரிப்பதுடன் சுத்தமான உடையணிந்து சுகாதாரமாகவும் இருக்க வேண்டும்.
- காலை உணவை சமைக்கும் போதும் மற்றும் பரிமாறும் போதும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தலையில் தொப்பிகள் மற்றும் கையுறைகளை அணிவதுடன் சம்மந்தப்பட்ட PLF மூலம் வருடத்திற்கு ஒருமுறை தொப்பிகள் மற்றும் கையுறைகள் வழங்கப்பட வேண்டும்.

I) காலை உணவு மற்றும் மதிப்பு ஊதியத்திற்கென நிர்ணயிக்கப்படும் தொகை

1) ஆரம்ப பள்ளிக் குழந்தைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் இணைத்து ஒரு குழந்தைக்கு சமையல் பொருட்கள் மற்றும் காய்கறிகள் வழங்குவதற்கு ஆகும் செலவினத் தொகையினை SHG-ற்கு நிதியாக விடுவித்திடும் போது 11.08.2022 தேதியிட்ட Roc.No17570/ மதிய உணவுத் திட்டம்-2/2021 இல் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் இயக்குனரால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளை கட்டாயமாக பின்பற்றிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.
2) ஒரு குழந்தையின் உணவுக்கான எரிபொருள் கட்டணமாக ரூ.1.25 வீதம் PLF கணக்கிற்கு விடுவிக்கப்படும்.
3) மாவட்ட ஆட்சித்தலைவரால் பச்சரிசி, அரிசி, உடைத்த அரிசி, பருப்பு, உப்பு மற்றும் எண்ணெய் போன்ற மூலப்பொருட்களுக்கான செலவினத் தொகையினை நேர்முக உதவியாளர் (சத்துணவு) திட்டம், துறை வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஆகியோரால் கணக்கிடப்பட்டு அதற்கான தொகையினை மண்டல மேலாளர், நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் ரவா, கோதுமை ரவா, சேமியா மற்றும் இதர உணவுபொருட்கள் போன்ற பொருட்களுக்கான தொகையினை இணை பதிவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் பட்டியல்களின் அடிப்படையில் மட்டுமே விடுவிக்கப்பட வேண்டும்.
4) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட வீதத்தில் மதிப்பூதியம் கணக்கிடப்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் வழங்கப்படும்.
5) மதிப்பூதியத் தொகையானது சம்மந்தப்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினரின் வங்கிக் கணக்கில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் விடுவிக்கப்படும்.
6) பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை 10க்கும் குறைவாக இருந்தால், அந்தப் பள்ளிக்கு ஹாட் பாக்ஸில் காலை உணவை வழங்க ஒரு சுய உதவிக்குழு உறுப்பினர் ஈடுபடுத்தப்படுவார். இவர்களுக்கு

மதிப்பூதியம் வழங்கப்படுவதற்குப் பதிலாக விநியோகக் கட்டணமாக ரூபாய் 1500/- மட்டுமே வழங்கப்படும்.

### J) அரசு நிதி உதவிப்பெறும் பள்ளி நிர்வாகக் குழு மற்றும் பள்ளி தலைமை ஆசிரியரின் கடமைகள்

- காலை உணவு திட்டத்தின் கீழ் பயனடைய விருப்பமுள்ள குழந்தைகளின் சரியான எண்ணிக்கையைக் கண்டறிவதற்கு பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் அரசு நிதி உதவிப்பெறும் பள்ளி மேலாண்மைக் குழு முழு பொறுப்பாகும்.

- சமையலறைக் கூடம் பள்ளியின் வளாகத்திற்குள் அமைந்திருப்பின், காலை 5.30 மணி முதல் 6 மணி வரை சுய உதவிக் குழுவினரால் காலை உணவை சமைப்பதற்கு ஏதுவாக சமையற் கூடத்தினை திறந்து வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

- தினமும் காலை 8.30 மணிக்குத் தொடங்கி காலை 9 மணிக்குள் முடிவடையும் வரை கண்காணித்திட ஏதுவாக சுழற்சி முறையில் பள்ளி ஆசிரியர் அல்லது அரசு நிதி உதவிப்பெறும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினரின் இருப்பை தலைமை ஆசிரியர் மற்றும் அரசு நிதி உதவிப்பெறும் பள்ளி மேலாண்மை குழு உறுதி செய்ய வேண்டும்.

- உணவுப் பொருட்கள் அல்லது தயாரிக்கப்பட்ட காலை உணவைத் முறையற்று பயன்படுத்தவோ அல்லது வீணாக்கப்படவில்லை என்பதை பள்ளித் தலைமையாசிரியர் / அரசு நிதி உதவிப்பெறும் பள்ளி மேலாண்மை குழு உறுதிப்படுத்துவதுடன் தினமும் முறையான கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் குழந்தைகளுக்கு உணவு பரிமாறும் முன் பள்ளி தலைமையாசிரியர் அல்லது பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர் ருசித்து உறுதி செய்ய வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒரு பாட்டிலில் உணவு மாதிரிகளை எடுத்து வைக்க வேண்டும்.

- குழந்தைகளுக்கு விநியோகிக்கப்படும் உணவின் தரம் மற்றும் சரியான அளவு ஆகியவற்றை மேம்படுத்திட தினசரி பின்னூட்ட அறிக்கையினை அரசு நிதி உதவிப்பெறும் பள்ளி மேலாண்மை குழுவால் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

### K) அங்கீகரிக்கப்பட்ட உணவு வகைகள் மற்றும் உணவின் அளவு:

- 27.07.2022 தேதியிட்ட அரசாணை எண்.43 (ம) 07.06.2023 தேதியிட்ட அரசாணை எண்.33 மற்றும் சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை இயக்குநரால் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகளின்படி அங்கீகரிக்கப்பட்ட உணவு வகைகளின் அட்டவணையின்படி காலை உணவு தயாரிக்கப்பட வேண்டும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களால் செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும். காலை உணவுத் திட்டத்தின் கீழ் 50 கிராம் அரிசி, ரவை, கோதுமை ரவா, சேமியா அல்லது சிறு தானியங்கள் மற்றும் சமைத்த பிறகு 150 கிராம் முதல் 200 கிராம் உணவாகவும் வழங்கப்பட வேண்டும். பருப்பு 15 கிராம் மற்றும் சமைத்த பிறகு காய்கறிகளுடன் 60 கிராம் சாம்பார் ஒரு குழந்தைக்கு என்ற அளவில் வழங்கப்பட வேண்டும். அனைத்து வட்டாரங்களிலும் / பேரூராட்சிகளிலும் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 5 வேலை நாட்களிலும் குழந்தைகளுக்கு சமைத்து வழங்கவேண்டும்.

- ஆணையர் சமூக நலன் & மகளிர் உரிமைத்துறை ந.க.எண்: 17570/ச.உ.தி-2/2021, தேதி 11.08.2022 அறிவுறுத்தலின் அடிப்படையில் பயிற்சியின் போது கொடுக்கப்பட்ட உணவு வகை அட்டவணையின்படி ஊட்டச்சத்துள்ள மற்றும் சரியான அளவு மூலப்பொருட்களின் கலவையுடன்

ஒரு குழந்தைக்கு 150 முதல் 200 கிராம் (சமைத்த பிறகு) காலை உணவினை மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர் கண்டிப்பாக வழங்க வேண்டும்.

- அம்மாவட்டம் மற்றும் வட்டாரங்களில் உள்ள சிறுதானியப் பொருட்களின் இருப்பு அடிப்படையில் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி இரண்டு நாட்கள் மெனுவில் தேவைப்படின் சிறுதானியங்களின் அடிப்படையிலான பட்ஜெட்டிற்கு உட்பட்டிருப்பின் காலை உணவு வழங்கலாம்.

**L) நிதி மூலதனம்**

- தேர்ந்தெடுக்கப்பட்ட SHG, காலை உணவுத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள போதுமான நிதி மூலதனத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
- 2 முதல் 3 மாதங்களுக்கு அவர்களின் சொந்தப் பொறுப்பில் சமையல் பணிகள் மேற்கொள்வதற்கு கடன் இணைப்பு அல்லது போதுமான நிதி இருப்பு இருக்க வேண்டும்.
- குழந்தைகளின் பாதுகாப்பு, மற்றும் நலனை முதன்மையாக கொண்டு செயல்படும் நம்பகமான SHG யாக இருக்க வேண்டும்.
- அரசாங்கத்திடம் இருந்து நிதி பெறுவதில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் சரிசெய்யப்பட வேண்டியிருந்தாலும், காலை உணவு தயாரிக்கும் பணி செய்வதற்கான நிதி செலவினத் தொகையினை சம்மந்தப்பட்ட SHG மேற்கொள்ள வேண்டும்.

**M) கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு**

- காலை உணவு திட்டத்தை செயல்படுத்துவது மாநில அளவில் ஆணையர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் அனைத்து கூடுதல் இயக்குநர் மற்றும் இணை இயக்குநர்கள், ஊரக வளர்ச்சித் துறை ஆகியோரால் தொடர் கள ஆய்வு மேற்கொண்டு மாவட்டங்கள் கண்காணிக்கப்படும்.
- மாவட்ட ஆட்சியர் மற்றும் திட்ட இயக்குநர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்/ உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) / செயல் அலுவலர் (பேரூராட்சிகள்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(சத்துணவு) ஆகியோரால் வாரத்தில் 3 நாட்கள் காலை உணவு திட்ட பள்ளி மையங்களில் ஆய்வு செய்யப்பட வேண்டும்.
- மாவட்ட ஆட்சி தலைவரால் நியமிக்கப்படும் மண்டல உதவித் திட்ட அலுவலர்கள் வாரத்திற்கு 10-15 காலை உணவு திட்ட பள்ளி மையங்களில் ஆய்வு செய்யப்பட வேண்டும்.
- உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் இதர அதே தகுதியிலான அலுவலர்களால் கட்டாயமாக பள்ளிகளில் தினசரி தொடர் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் விபரத்தினை அறிக்கையாக மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
- ஊரகப் பகுதிகளில் வட்டார இயக்க மேலாளர், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் அனைத்துப் பள்ளிகளுக்கும் அடிக்கடி தொடர் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உணவின் தரம் மற்றும் அதன் அளவு குறித்த விபரத்தினை அறிக்கையாக திட்ட இயக்குநர் மற்றும் மண்டல உதவித் திட்ட அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

- சமூக வள பயிற்றுநர் - கூட்டாண்மை & ஒருங்கிணைப்பு (CRP – P&C) நாள்தோறும் இப்பணிகளை கண்காணிக்க வேண்டும்.

- மாவட்ட ஆட்சியர் மற்றும் திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் பள்ளி மையங்களை கண்காணிக்கவும், செயல்பாடுகளை எளிதாக்கவும், கருத்துகளை தெரிவிக்கவும் மாவட்ட அளவிலான வாட்ஸ்அப் குழு உருவாக்கப்பட வேண்டும்.
- மாவட்ட அளவில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒட்டுமொத்த பொறுப்பாளராக உதவி திட்ட அலுவலர் (கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு) இருப்பார்.

- மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) உணவுப் பொருட்களின் விநியோகத்தின் ஒட்டுமொத்த கண்காணிப்பில் முக்கிய பங்கு வகித்திடவும் மற்றும் மண்டல மேலாளர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் இணைப் பதிவாளர் கூட்டுறவு சங்கம் ஆகியோருக்கு சரியான நேரத்தில் பணம் செலுத்துவதை உறுதி செய்திட வேண்டும்.

### N) இத்திட்டத்தைக் கண்காணிப்பதற்கான மூன்று அடுக்கு அமைப்பு முறை :

#### மாவட்ட அளவிலான குழு

- இக்குழுவிற்கு தலைவராக மாவட்ட ஆட்சி தலைவர் மற்றும் திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு), மாவட்ட சமூக நலத்துறை அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர், உதவி இயக்குநர்(பேரூராட்சிகள்), இணைபதிவாளர், கூட்டுறவுச் சங்கம், மண்டல மேலாளர், நுகர்பொருள் வாணிபக் கழகம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்/ மாவட்ட தொடக்கப்பள்ளிக் கல்வி அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உறுப்பினராக இருப்பர்.
- மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) மாவட்ட அளவிலான குழுவின் ஒருங்கிணைப்பாளராக இருப்பார்.

#### வட்டார அளவிலான குழு

- இவ்வட்டார அளவிலான குழுவில் வட்டார வளர்ச்சி அலுவலர், செயல் அலுவலர்(பேரூராட்சிகள்), மண்டல உதவித் திட்ட அலுவலர், வட்டாட்சியர், முக்கிய சேவிகா, வட்டார இயக்க மேலாளர் ஆகியோர் வட்டார அளவிலான குழுவின் உறுப்பினர்களாக இருப்பர்.
- திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியரிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

- வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) வட்டார நிலைக் குழுவின் ஒருங்கிணைப்பாளராக இருப்பார்.

#### ஊராட்சி அளவிலான குழு

- ஊராட்சி / பேரூராட்சி அளவில் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள முதன்மை குழு, காலை உணவுத் திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்துவதற்கான கண்காணிப்புக் குழுவாகச் செயல்படும்.

- பள்ளியின் தலைமை ஆசிரியர் இந்தக் குழுவின் ஒருங்கிணைப்பாளராக இருந்து, திட்டத்தை திறம்பட செயல்படுத்திட பணியாற்றுவார்.

மூன்றாம் தரப்பு மதிப்பீடு

- மேற்காணும் அரசாணையின் அடிப்படையில் காலை உணவுத் திட்டம் சிறப்பாக செயல்படுத்துவதை மதிப்பிடுவதற்காக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை துறையின் வாயிலாக அடிப்படை மற்றும் இறுதி கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு 3ம் தரப்பு பிரதிநிதிகள் மூலம் மதிப்பீடு செய்யப்படும்.

O. காலை உணவு திட்டத்திற்கான மூலப்பொருட்களின் கொள்முதல்

1) ந.க.எண்: 17570/ச.உ.தி-2/2021, தேதி 11.08.2022, ஆணையர் சமூக நலன் & மகளிர் உரிமைத்துறை ஆல் தெரிவிக்கப்பட்ட அளவின்படி ஒரு குழந்தைக்கு தேவைப்படும் பச்சரிசி, அரிசி, உப்பு, எண்ணெய் மற்றும் பருப்பு (துவரம்பருப்பு) ஆகிய உணவு மூலப் பொருட்களின் விபரத்தினை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு)-ஆல் தயார் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகளின்படி நேர்முக உதவியாளர் (சத்துணவு) வாயிலாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கொள்முதல் ஆணை வழங்கப்பட்டு சம்பந்தப்பட்ட பள்ளி மையங்களுக்கும் மதிய உணவு திட்டத்தில் வழங்குவதை போல் பொருட்கள் வழங்கியிருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

2) ரவா, கோதுமை ரவா, சேமியா, மிளகு, கடுகு, வெந்தையம் சிவப்பு மிளகாய், நெய், சாம்பார்பொடி, சீரகம், சோம்பு, பெருங்காயம் போன்ற பிற மளிகைப் பொருட்களின் அளவினை குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இணை பதிவாளர், கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட்டு நியாயவிலைக் கடைகள் (Public Distribution Shop) மூலம் பெறப்பட வேண்டும் மற்றும் காலை உணவை சமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள SHG / PLF அதை நியாயவிலைக் கடைகளில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் இரண்டு கொள்முதல்களுக்கும், மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் இணை பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றிடம் இருந்து வரப்பெறும் விலைப்பட்டியல் அடிப்படையில் தொகையினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகளின் வாயிலாக வழங்கப்படும்.

P. பதிவேடுகளை பராமரித்தல்

சமூக நலத்துறையால் காலை உணவுத் திட்டத்திற்கென வழங்கப்படும் ஒருங்கிணைந்த பதிவேடுகளை முறையாக சம்மந்தப்பட்ட சுய உதவிக்குழு உறுப்பினரால் பராமரிக்கப்பட வேண்டும். இதனை அவ்வபொழுது மகளிர் திட்ட களப்பணியாளர்கள் (CRP- P&C, CST, BC, BM, APO, PA Noonmeal Program, கல்வித்துறை, சமூகநலத்துறை அலுவலர்கள் மூலம் கண்காணிக்கப்பட வேண்டும். பின்வரும் 8 பேரேடுகள் மற்றும் பதிவேடுகள் SHG ஆல் பராமரிக்கப்படும்:

1. தளவாடப் பொருட்கள் இருப்பு பதிவேடு (பாத்திரங்கள்)
2. SHG வருகை பதிவேடு
3. மாணவர்களின் மொத்த எண்ணிக்கை பதிவேடு
4. மாணவர் வருகை பதிவேடு
5. பண வரவு மற்றும் செலவு விவரங்கள் இரசீது

6. மூலப்பொருட்கள்/ இருப்பு பதிவு பதிவேடு (உணவு பொருட்கள்)

7. அதிகாரிகளின் ஆய்வு குறிப்புகள் பதிவேடு.

8. நடைமுறை செலவினம் மற்றும் உள்ளூர் பொருள் கொள்முதல் செய்வதற்கான பதிவேடு.

உணவின் சுவை குறிப்பு பதிவேடு

சுய உதவிக் குழுக்கள் முறையாக பதிவேடுகளை பராமரித்திட ஏதுவாக இயக்குநர், சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை துறையால் பதிவேடுகள் ஒரே தொகுப்பாக அச்சிடப்பட்டு SHGகளுக்கு விநியோகிக்கப்படும்.

கையிருப்பு மூலப்பொருட்கள் அல்லது நிதியில் ஏதேனும் குறைபாடு கண்டறியப்பட்டால், சத்துணவு திட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்வது போல் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), செயல் அலுவலர் (பேரூராட்சிகள்) மூலம் பள்ளியின் சமையற்கூட மையப் பொறுப்பாளர் SHG உறுப்பினர் மீது தேவையான நடவடிக்கை மேற்கொள்வதுடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) / திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் / மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடமும் புகாரளிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**Q. காலை உணவுத் திட்டத்திற்கான நிதி அமைப்பு முறை**

1. காலை உணவு திட்டத்தை செயல்படுத்த தேவையான நிதியை இயக்குநர், சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் விடுவிக்கப்படும் நிதி மேலாண்மை இயக்குனர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் மாண்புமிகு முதல்வரின் காலை உணவு திட்ட இந்தியன் வங்கி, நுங்கம்பாக்கம் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.
2. மாவட்ட ஆட்சியர் மற்றும் திட்ட இயக்குநர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து செயல்படும் வகையில், மாவட்ட ஆட்சியரால் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்காக இந்தியன் வங்கியில் பிரத்யேகமாக ஏற்கனவே துவங்கப்பட்ட வங்கிக் கணக்கிலேயே பராமரிக்கப்பட வேண்டும்.
3. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்களால் மாவட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்படும், மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் இணை பதிவாளர், கூட்டுறவு சங்கத்தால் வழங்கப்பட்ட அனைத்து மூலப்பொருட்களுக்கான செலவினத் தொகை மற்றும் மூலப்பொருள் விநியோக விலைப்பட்டியல் அடிப்படையில் நிதி விடுவிக்கப்பட வேண்டும்.
4. இயக்குநர் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி உணவு மூலப்பொருட்களுக்கான செலவைக் கழித்த பிறகு, காய்கறிகள் கொள்முதல் செய்வதற்கான செலவினத் தொகை மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான மதிப்பூதியம் மற்றும் எரிவாயு இணைப்பு பெறுவதற்கான தொகை ரூ.1.25/- ஒரு நாளைக்கு குழந்தை ஒன்றுக்கு வீதம் PLF உள்ள CMBFS திட்டத்திற்கென தனியாக துவங்கப்பட்ட வங்கி கணக்கிற்கு தொகை விடுவிக்கப்படும். PLF அவற்றுக்கான ரொக்கப் பதிவேட்டினை முறையாக பராமரிப்பதுடன் தினசரி செலவுகள் மற்றும் நிதி வரவினை பதிவு செய்வதுடன் வரவு செலவு இரசீதுகளையும் பராமரிக்க வேண்டும்.
5. PLF கணக்கிற்கு விடுவிக்கப்படும் அனைத்து நிதிகளும் மின் பரிவர்த்தனை மூலமாகவோ அல்லது அவர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வங்கி பரிமாற்றம் மூலமாகவோ விடுவிக்கப்படும்.

6. காய்கறி/ கேஸ் எரிபொருள் செலவின தொகையானது சுய உதவிக்குழு உறுப்பினர்/பள்ளி மையப் பொறுப்பாளரின் வங்கிக் கணக்கிற்கு விடுவிக்கப்படும்.

7. எந்த ஒரு சூழ்நிலையிலும் ஊராட்சி அளவிலான /பகுதி அளவிலான கூட்டமைப்புகள் நேரடி பண பரிவர்த்தனைகள் மேற்கொள்ளக்கூடாது.

**நிர்வாக மற்றும் செயல்படுத்துதல் துறை**

மாநில அளவில் நிதி விடுவிப்பதற்கு இயக்குநர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களே பொறுப்பாகும். இதர துறைகள் இத்திட்டத்தை ஒருங்கிணைத்தல், கண்காணித்தல் மற்றும் அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாகும்.

ஊரகப் பகுதிகளைப் பொறுத்தமட்டில், கிராம ஊராட்சிகள் / பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியோர் பொறுப்பாவதுடன் இத்திட்டத்தையும் செயல்படுத்துவர்.

**ஒருங்கிணைக்கும் துறைகள்:**

மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை இதர பல்வேறு பிற துறைகளுடன் இணைந்து, ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும். பிற துறைகளான பள்ளிக் கல்வி துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவு சங்கம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை போன்ற துறைகள் இத்திட்டத்தினை திறம்பட செயல்படுத்திட முக்கிய பங்கு வகிக்கின்றன. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் மாணவர்கள் தொடர்பான அனைத்து விவரங்களையும் பள்ளிக் கல்வித்துறை அளிக்க வேண்டும். திட்டத்தை முறையாக செயல்படுத்துவதில் பள்ளி மேலாண்மை குழு முக்கிய பங்கு வகிக்கும் மற்றும் இல்லம் தேடி கல்வியின் சிறப்பு அலுவலர் மாநில அளவில் திட்ட ஒருங்கிணைப்பாளராக செயல்படுவார். மாவட்ட அளவில், மாவட்ட தொடக்க கல்வி அலுவலர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், அந்தந்த வட்டாரங்கள், மண்டலங்கள் மற்றும் மாவட்டங்களின் முதன்மை கல்வி அலுவலர் ஆகியோர் இத்திட்டத்தைக் கண்காணித்து காலை உணவு திட்டம் சிறப்புற செயல்பட பொறுப்பு வகிப்பர்.

**கைப்பேசி செயலி (Mobile App) மூலம் கண்காணித்தல்:**

இந்த திட்டத்தை செயல்படுத்துவதை பிரத்தியேகமாக கண்காணிப்பதற்காக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) ஆல் வடிவமைக்கப்பட்ட "**கைப்பேசி செயலி** (CMBFS மொபைல் ஆப்)" உருவாக்கப்படும். கிராம ஊராட்சிகள் /பேரூராட்சிகளில் உள்ள பள்ளி மையங்களைப் பொறுத்தமட்டில், ஆண்ட்ராய்டு மொபைலுடன் பள்ளி மையப் பொறுப்பாளரான SHG உறுப்பினர், சமையல் தொடங்குதல், சமைத்து முடித்தல் மற்றும் காலை உணவு பரிமாறுதல் மற்றும் காலை உணவை எடுத்துக் கொண்ட குழந்தைகளின் எண்ணிக்கை போன்ற விவரங்களை புகைப்படங்களுடன் தங்களுடைய ஆன்ட்ராய்டு மொபைல்போன் மூலம் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். இதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால், எச்சரிக்கை செய்தி வட்டார அளவில் வழங்கப்படும். இத்திட்டத்தை சிறப்புற செயல்படுத்திட மாவட்ட அளவிலான அலுவலர்கள், மாநில அளவிலான அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். புள்ளி விபரங்கள் மின்னணு மற்றும் மின்னணு அல்லாத பதிவுகள் வாயிலாக பதிவேற்றம் செய்யப்படும்.

"**CMBFS- கைப்பேசி செயலியின்**" செயல்பாடு, 'ஆரம்பம்' முதல் இறுதி' வரை அனைத்து நிலைகளிலும் தினசரி செயல்பாடுகளை கண்காணித்திட சிறந்த கருவியாக உள்ளது.

பள்ளியின் சமையற்கூட மையத்தின் பொறுப்பாளரான சுய உதவிக் குழு உறுப்பினர் புகைப்படங்களுடன் விபரங்களை அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் மொபைல் ஆப்பில் பதிவேற்றம் செய்வதற்கு TNeGA மூலம் பயிற்சி வழங்கப்படும்.

**முடிவுரை:**

முதலமைச்சரின் காலை உணவு திட்டம் இரத்த சோகை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பள்ளி மாணவர்களிடையே பள்ளி இடைநிற்றலைக் குறைக்கிறது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 2022-23 கல்வியாண்டில் 963 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளிகள், 17 வட்டாரங்கள் மற்றும் 16 மாவட்டங்களில் உள்ள 346 கிராம ஊராட்சிகளில் முன்மாதிரி திட்டமாகவும், 2023-2024 கல்வியாண்டில் அனைத்து மாவட்டங்களிலுள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் விரிவாக்கம் செய்யப்பட்டும் 28,377 பள்ளிகளிலும் (26,516 ஊரகப் பகுதிகளிலுள்ள பள்ளிகள் மற்றும் 1,891 பேரூராட்சி பகுதிகளிலுள்ள பள்ளிகள்) செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை செயல்படுத்தும் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பங்கேற்பு, ஈடுபாடு மற்றும் குழந்தைகளுக்கு சேவை செய்வதில் அவர்களின் அர்ப்பணிப்பு உணர்வு அனைத்து பத்திரிகைகள், சமூக ஊடகங்கள் போன்றவற்றால் பாராட்டப்படுகிறது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் முன்மாதிரியாக செயல்படுத்தியதன் மூலம் பள்ளிகளில் மாணாக்கர்களின் வருகை அதிகரித்துள்ளது.

இதே சிறந்த செயல்பாடு மற்றும் உற்சாகம், அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" விரிவாக்கத்தில் காட்டப்படுவதுடன் கிராம அளவிலான முதன்மை குழுவால் (VLCC) உருவாக்குதல், சுய உதவிக் குழு / ஊராட்சி அளவிலான / பகுதி அளவிலான கூட்டமைப்பு மகளிரை தேர்வு செய்தல், அவர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு அடையச் செய்தல், "கைப்பேசி செயலி (CMBFS Mobile App)" வாயிலாக விபரங்களை பதிவேற்றம் செய்தல் ஆகியவற்றின் வாயிலாக அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை சாதனைபுரியும், ஆரோக்கியமான, படிப்பில் சிறந்து விளங்கும் குழந்தைகளாக திகழச் செய்வதுடன் "ஊட்டச்சத்து குறைபாடில்லாத குழந்தைகளை கொண்ட மாநிலமாக" மாற்றிட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு தொடர் கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒம்/-
மேலாண்மை இயக்குநர்
த.நா.ம.மே. நிறுவனம்

// உண்மை நகல் உத்தரவுப்படி //

கூடுதல் இயக்குநர் (சு.உ.கு)
த.நா.ம.மே. நிறுவனம்

## முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்

### நிதி விடுவிக்கப்படும் வழிமுறைகள்

இயக்குநர்
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திட்ட இயக்குநர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு)

மண்டல மேலாளர்
தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் (உணவு பொருட்கள்)

இணை பதிவாளர்
கூட்டுறவு சங்கங்கள்
(உணவு பொருட்கள்)

ஊராட்சி அளவிலான / பகுதி அளவிலான கூட்டமைப்பு (காய்கறிகள், மளிகை பொருட்கள், எரிவாயு/ மதிப்பூதியம் தொகை)

சமையல் பொருப்பாளர்/SHG உறுபபினர்

**உணவுப் பொருட்கள் கொள்முதல்**

பச்சரிசி, அரிசி, பருப்பு, உப்பு மற்றும் எண்ணெய் (மண்டல மேலாளர் (TNCSC)

ரவா, கோதுமை ரவா, சேமியா மற்றும் பிற பொருட்கள்
(இணை பதிவாளர் கூட்டுறவு சங்கங்கள் - RCS)

காய்கறிகள் மளிகைப் பொருட்கள்,
எரிவாயு, ஊக்கத் தொகை (உள்ளூர் கொள்முதல்)
(PLF-SHG)